18.04.2026

அ.வ.எண். 137/2025

வா.சா.1 – திருமதி. சாந்தாமணி க/பெ. சின்னசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 18.04.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என் கணவர் சின்னசாமி 01.04.2011 ம் தேதியில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். சின்னசாமியின் உடன்பிறந்தவர் கருப்பசாமி ஆவார். மேற்படி கருப்பசாமி, சின்னசாமியின் அண்ணன் ஆவார். சின்னசாமிக்கு, நானும், தமிழரசன், ரேவதி, மாரம்மாள் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மாரம்மாள், சின்னசாமியின் தாயார் என்றால் சரிதான். மாரம்மாள் 2014 ம் ஆண்டில் காலமானார் என்றால் 10 வருடங்கள் இருக்கும். என் கணவர் இறந்த பின்னிட்டு இறந்தார். மாரம்மாளுக்கு, சின்னசாமி மற்றும் கருப்பசாமி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. கருப்பசாமி 6 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். கருப்பசாமி, மாரம்மாள் இறப்பிற்கு பின்னிட்டு இறந்தார் என்றால் சரிதான். கருப்பசாமியின் வாரிசுகள், மனோன்மணி, கலைவாணி, வசந்த் என்றால் சரிதான். கருப்பசாமியின் வாரிசுகளுக்கு தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றால் இல்லை, இது என் கணவரும், நானும் வாங்கிய சொத்து ஆகும்.தாவா சொத்தை நானும், என் கணவரும் வாங்கவில்லை என்றும், என் கணவர் மட்டும் வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மாரம்மாள் இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான சின்னசாமி மற்றும் கருப்பசாமி ஆகியோர்களுக்கும் உரிமை உள்ளது என்றும், கருப்பசாமி இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

3. கருப்பசாமியின் வாரிசுகளை தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு சேர்க்காத காரணத்தால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில், பிரதிவாதியை அணுகி

காலவதியான கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்து தருமாறு பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டேன். என் கணவர் இறந்த பின்னிட்டு, தாவா சொத்தை வாதிகள், 3ம் நபருக்கு விற்பனை செய்ய முயற்சி செய்தோம் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு மூலம் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur